# சுருளி சாரல் விழா - 2024

தமிழ்நாடு அரசு, தேனி மாவட்ட நிர்வாகம் மற்றும் தேனி சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய இந்த ஆண்டிற்கான **"சுருளி சாரல் விழா - 2024"** நிகழ்வு 28.09.2024 முதல் 02.10.2024 வரை நடைபெற்றது. தேனி மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு கழகத்தால் வருடந்தோறும் நடைபெறும் நிகழ்வில் கடந்த ஆண்டினைப் போன்று இவ்வாண்டும் நமது கல்லூரித் தமிழ்த்துறை மற்றும் பிறதுறை மாணவர்கள் கலந்து கொண்டு தங்களின் தனித்திறனை வெளிப்படுத்தினர். மூன்றாம் நாள் நிகழ்வில் பங்கெடுத்த நம் கல்லூரி மாணவர்கள் தேவராட்டம், கரகாட்டம், கட்டக்கால் ஆட்டம் மற்றும் டிரம்ஸ் தாளம் வாசித்தல் என மிக அழகாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். சுருளி விழாவினைக் காணவந்த சுற்றுலா வாசிகள் தங்களது கண்கள் மற்றும் காதுகளுக்கு இனிமையான இசை மற்றும் நடனக் காட்சிளை கண்டு இன்புற வாய்பளித்தமைக்காக மாணவர்களுக்கும், கல்லூரிக்கும், பேராசிரியர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். மற்றுமின்றி மாணவர்களின் திறமைகள் மேலும் மேலும் வளர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். இச்சாரல் சுற்றுலாவிற்கு வரலாற்றுத்துறை பேராசிரியர் முனைவர் இரா.கபேஷ், தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் நா.பால்பாண்டி மற்றும் வணிக நிர்வாகவியல் பேராசிரியர் ஜெகதீஸ் ஆகியோர் மாணவர்களை வழிநடத்திச் சென்றனர்.